செ.வெ.எண்: 128/2017 நாள்: 20.02.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள்,
பொது மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில்,
22 பயனாளிகளுக்கு ரூ. 38 இலட்சத்து 17 ஆயிரத்து 500/-க்கான காசோலைகளை இன்று (20.02.2017) வழங்கினார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், பொது மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக லூயி பிரெயிலி கூட்டரங்கில் இன்று (20.02.2017) நடைபெற்றது.

திங்கட்கிழமை தோறும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறும் பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு குறைகள் தீர்க்க நடவடிக்கை மேற்கொள்வதுடன், நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், இனயம் சின்னத்துறை மீனவ கிராமத்தில் 02.11.2013 அன்று இரவு கடற்கரையில் ஏற்றி நிறுத்தப்பட்ட 3 வள்ளங்கள் தீ விபத்துக்களாகி சேதம் அடைந்தது. இந்த வள்ளத்தின் உரிமையாளர்கள் இனயம் சின்னத்துறையை சார்ந்த திரு. எம். மரியசெல்வன் மற்றும் திரு. ஜெ. சகாயதாசன் ஆகியோர்களுக்கு தலா ரூ.7 ஆயிரத்து 500/-க்கான காசோலைகளையும், திரு. பி. ஆரோக்கியதாஸ் என்பவருக்கு ரூ. 2 ஆயிரத்து 500/-க்கான காசோலையினையும், சௌதி நாடு, அஜ்மானின் சிறை பிடிக்கப்பட்டு, விடுவிக்கப்பட்ட (12.07.2016 மற்றும் 14.07.2016) கன்னியாகுமரி மாவட்டத்தை சார்ந்த 19 மீனவர்களின் குடும்பம், வறுமை நிலையினை கருத்தில் கொண்டு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 2 இலட்சத்திற்கான காசோலைகள் என மொத்தம் 22 பயனாளிகளுக்கு ரூ. 38 இலட்சத்து 17 ஆயிரத்து 500/-க்கான காசோலைகளை, மாவட்ட ஆட்சியர் அலுவலக லூயி பிரெயிலி கூட்டரங்கில் இன்று (20.02.2017) நடைபெற்ற பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவுத் தலைவர் திரு. எம். சேவியர் மனோகரன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ.இளங்கோ, துணை இயக்குநர் (மீன்வளத்துறை) திரு. லாமக் ஜெயக்குமார், உதவி இயக்குநர் திரு. நாபிராஜ், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு. எம். சந்திரன், திரு. என்.என்.ஸ்ரீஜயப்பன், பேரிடர் மேலாண்மை தனி வட்டாட்சியர் திரு. கண்ணன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.